மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.130/2016</u>

2026 ம் ஆண்டு ஜுலை 08 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயலட்சுமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>08.07.2026 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பாப்பனி கிராமம் புல எண் 333/பி –ல் புஞ்சை ஏக்கர் 1 ஏக்கர் 41 சென்ட் பூமிகள் உள்ளது என்றால் ஆமாம். 333/C ல் புல எண்ணில் 1 ஏக்கர் 26 சென்ட் பூமிகள் உள்ளது என்றால் ஆமாம். 334 புல எண்ணில் 3 ஏக்கர் 35 சென்ட் பூமிகள் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி பூமிகளை பொறுத்து கடந்த 10.11.1999 ஆம் தேதி கருப்பண நாடார் வாரிசுகளும், முத்தப்ப நாடார் என்பவரின் மருமகள் பெரியம்மாள் ஆகியோர்கள் சேர்ந்து பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

2. அந்த பாகப்பிரிவினை அடிப்படையில் தான் மேற்படி அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் ஆமாம். வாதி சாமியாத்தாள் என்பவர் முத்தப்ப நாடார் என்பவரின் மகள் கிடையாது என்று சொன்னால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. வாதி தாவா சொத்துக்களை பொதுவில் வைத்து அனுபவம் செய்து வருவதாக நான்

வழக்குக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.07.08 18:44:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்